பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 வைகாசி 32 ஞாயிற்றுக்கிழமை (14 06-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 199

யாழ்ப்பாணம்

# புலிகளை முழுமையாக வெல்வது இராணுவத்துக்கு இயலாத காரியம்!

## அரச அதிகாரி கருத்துக் கூறியதாக பி. பி. ஸி. செய்தியாளர் தகவல்

கொழும்பு, ஜூன் 14

தமிழீழ விடுதலைப் புலிகளை முழுமையாக வெற்றிகொள்வது என்பது இயலாத காரியம் உலகின் மிகச் சிறந்த கரந்தடிப் படையினராகப் புலிகள் விளங்குகிறார்கள்.

—இவ்வாறு அரசாங்க உயர் அதிகாரி ஒருவர் தன்னிடம் தெரிவித்ததாக பி. பி. ஸியின் கொழும்புச் செய்தியாளர் சாக்கா நூஸ் தகவல் வெளியிட்டார்.

விடுதலைப் புலிகளை ஒழிப்பது, யாழ்ப்பாணக் குடாநாட்டை அவர்களின் கட்டுப்பாட்டில் இருந்து கைப்பற்றுவது என்ற இலக்குகளுடன் ஸ்ரீலங்கா இராணுவம் கடந்த மாத இறுதியில் யாழ். மாவட்டத்தில் தனது தாக்குதல்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## தெரிவு குழுவை யாழ். அழைக்க புலிகளுக்கு வேண்டுகோள்

### குழு உறுப்பினர் விடுத்ததாகச் செய்தி

கொழும்பு, ஜூன் 14

விடுதலைப் புலிகள் இயக்கம் விரும்பினால் தெரிவுக் குழுவை யாழ்ப்பாணத்துக்கு வரவழைத்துத் தனது யோசனையைத் தெரிவிக்கலாம் என்று அவர்களுக்குத் தகவல் அனுப்பப்பட்டிருப்பதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

இது தொடர்பான தகவலை, தெரிவுக் குழுவின் அங்கத்தவர் ஒருவர், செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் மூலம் தெரியப்படுத்தியிருப்பதாகவும் அச்செய்தியில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

விடுதலைப் புலிகள் விரும்பினால், இனப் பிரச்சினை சம்பந்தமான தீர்வுத் திட்டத்தை - யோசனையை தெரிவுக் குழு முன்னிலையில் சமர்ப்பிக்கலாம் அல்லது தெரிவுக் குழுவை யாழ்ப்பாணத்துக்கு வரவழைக்கலாம். தனது யோசனையை அங்கு வைத்தே சமர்ப்பிக்கலாம் — என்ற தகவலே செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு மூலம் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

இதே வேளை, தெரிவுக்

[6ஆம் பக்கம் பார்க்க]

## புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள 3 கேந்திர நிலைகளை பிடிக்க 2 ஆம் கட்ட நடவடிக்கை!

### அரசு தரப்பில் திட்டமாம்

கொழும்பு, ஜூன் 14

வடபகுதியில் மேற்கொள்ளப்படவுள்ள இரண்டாவது கட்ட இராணுவ நடவடிக்கை, விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள மூன்று கேந்திரப் பகுதிகளை இலக்கு வைத்தே நடத்தப்படும்.

பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி "த ஐலண்ட்" பத்திரிகை இவ்வாறு செய்தி வெளியிட்டிருக்கிறது.

குறிப்பிட்ட மூன்று கேந்திரப் பகுதிகளும் எவை என்பதை பாதுகாப்பு வட்டாரங்கள் வெளியிட மறுத்துவிட்டன என்றும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் —

தளநிலையை மதிப்பீடு செய்து அடுத்த கட்ட நடவடிக்கை பற்றி ஆராய்வதற்காக முப்படைகளையும் சேர்ந்த உயரதிகாரிகள் பலாலி சென்றிருப்பதாக மற்றொரு கொழும்புச் செய்தி தெரிவித்தது. [உ-எ-த]

## கிராமசேவையாளர் தெரிவு: வினாத்தாள் வராததால் பரீட்சார்த்திகள் ஏமாற்றம்

### 6மணிநேரம் காத்திருந்து திரும்பினர்

யாழ்ப்பாணம், ஜூன் 14

கிராமசேவையாளர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப்பரீட்சை நேற்று யாழ். மாவட்டத்தில் மட்டும் நடைபெறவில்லை: நாட்டின் ஏனைய மாவட்டங்களில் இப்பரீட்சைகள் நடைபெற்றன.

யாழ். மாவட்டத்துக்குரிய வினாத்தாள்கள் இங்கு வந்து சேராததே பரீட்சை நடைபெறாமல் போனதற்குக் காரணமாகும்.

யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து இப்பரீட்சைக்கு விண்ணப்பித்திருந்த சுமார் 4 ஆயிரம் பரீட்சார்த்திகளும் [illegible]

(6ஆம் பக்கம் பார்க்க)

## தி. மு. கவினர் 10 ஆயிரம் பேர் நேற்று கைது!

யாழ்ப்பாணம், ஜூன் 14

தமிழகத்தில் விவசாயத் தேவைகளுக்கான மின்வினியோகத்துக்கு வரி விதிப்பது என மாநில அரசு முடிவு செய்திருப்பதை எதிர்த்து தமிழ்நாட்டில் எதிர்க்கட்சிகள் மாட்டுவண்டில் மற்றும் டிராக்டர் பேரணிகளை நடத்தின

இந்தக் கண்டனப் பேரணிகளுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் போது தி. மு. கவின் எம். பியான வை. கோபால்சாமி உட்பட தி.மு. கவினர் 10 ஆயிரம் பேர் கைதாகினர்.

தமிழக அரசின் முடிவை ஆட்சேபித்து பாட்டாளி மக்கள் கட்சி நாளை தமிழகம் முழுவதும் அரச அலுவலங்கள் முன் 'தூக்குக் கயிறு, [illegible] அறிவித்துள்ளது. [உ-5]

## வெற்றிலைக்கேணிக் கடலில் பாரிய கடற்படைக் கப்பல்!

தாளையடி, ஜூன் 14

வெற்றிலைக்கேணி கடற்பரப்பில் ஸ்ரீலங்கா கடற்படையினரின் பாரிய கப்பல் ஒன்று நங்கூரமிட்டுள்ளது.

வெற்றிலைக்கேணியில் கடந்த வருடம் இராணுவத்தினர் தரையிறக்கப்பட்ட சமயமும் இதே போன்ற கப்பல் அப்பகுதிக் கடலில் நங்கூரமிட்டிருந்ததாக ஊர் வாசிகள் தெரிவிக்கின்றனர்.

கப்பல் தொடர்ந்து அப்பகுதியில் தரித்து நிற்பதால் மக்கள் மத்தியில் பீதி நிலவுகிறது. [ஓ-144]

## மாதகல் கடலிலிருந்து கடும் பீரங்கித் தாக்கு!

யாழ்ப்பாணம், ஜூன் 14

மாதகல், சேந்தாங்குளம் கடற்பிராந்தியத்தில் இருந்து கடற்படையினர் நேற்றுக் காலை 6 மணியளவில் மாதகல், பத்தாவத்தை, முள்ளானை, இளவாலைப் பகுதிகளை நோக்கி கண்மூடித்தனமாக பீரங்கித் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

இதே சமயம் அப்பகுதிகளுக்கு மேலாக ஹெலி ஒன்றும் வட்டமிட்டுக் கொண்டிருந்தது.

இதனால் பீதியடைந்த மக்கள் தமது வீடுகளில் இருந்து வெளியேறத் தொடங்கினர். அவர்கள் மூடை முடிச்சுகளுடன் அயல் கிராமங்களுக்கு வண்டில்களிலும் கால் நடையாகவும் சென்று கொண்டிருந்தன. [ஓ-15]

## மூளாய்ப் பகுதியிலும் பீரங்கி குண்டுகள் வெடித்தன

காரைநகர் கடற்பகுதியில் இருந்து நேற்று முற்பகல் 9.30 மணியளவில் படையினர் கடும் பீரங்கித் தாக்குதல்களை நடத்தினர்.

பொன்னாலை, மூளாய், வட்டுக்கோட்டைப் பகுதிகளில் பீரங்கிக் குண்டுகள் விழுந்து வெடித்தன என்று தெரிவிக்கப்பட்டது

படையினரின் இந்தத் திடீர் தாக்குதல்களினால் மீனவர்கள் பெரும் பதற்றமடைந்தனர். அவர்கள் தொழிலையும் கைவிட்டு விட்டு ஓடித் தப்பினர். [ஓ-28]

## நகர கரையோரங்களை நோக்கி பீரங்கிப் படகுகளிலிருந்து படையினர் சரமாரியாக சூடு!

யாழ்ப்பாணம், ஜூன் 14

மண்டைதீவுக் கடற்பகுதியில் இருந்து நேற்று மாலை 5 45 மணியளவில் யாழ் நகரின் கரையோரப் பகுதிகளை நோக்கி படையினர் சரமாரியாக வேட்டுக்களைத் தீர்த்தனர்.

பீரங்கிப் படகுகளில் இருந்தே படையினர் இந்தத் தாக்குதலை நடத்தினர்,

இதேசமயம் —

மண்டைதீவுக் காவலரண்களில் இருந்து நேற்றுப் பிற்பகல் 3.45 மணிக்கு படை

[6ஆம் பக்கம் பார்க்க]

## கிளிநொச்சி மாவட்டத்தில் நெல்லின் விலை உயர்ந்தது

கிளிநொச்சியில் நெல்லின் விலை உயர்ந்துள்ளது. இது வரை சராசரி 550 ரூபாவாக விற்கப்பட்டு வந்த ஒரு மூடை நெல் இப்போது 700 ரூபாவுக்கு உயர்ந்திருக்கிறது.

யாழ்ப்பாணத்திலிருந்து வந்து கொள்வனவு செய்யும் வர்த்தகர்கள், இம்முறை அதில் அக்கறை காட்டாததால், பெரும்போக அறுவடையில் கிடைத்த பெருமளவு நெல் கிளிநொச்சி மாவட்டத்தில் தேங்கிக் கிடந்தது. விலையும் வெகுவாகச் சரிந்திருந்தது.

இப்போது விலை உயர்ந்திருப்பதால் விவசாயிகள் தமது நெல்லை விற்று வருகிறார்கள். அரிசியின் விலையும் கிளிநொச்சியில் கிலோ 19 ரூபாவாக உயர்ந்துள்ளது.

இரணமடுக் குளத்தில் தண்ணீரில்லாத காரணத்தால், கிளிநொச்சியில் இம்முறை சிறுபோக நெற்செய்கையில் ஈடுபட முடியாத கஷ்ட நிலை தோன்றியுள்ளது. [அ-76]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வலி - வடக்கில்**

# ஆலயங்கள் தாக்கப்பட்டது குறித்து முறைப்பாடு இல்லை

## சரத் முனசிங்க கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 14

வலி - வடக்கு இராணுவ நடவடிக்கையின்போது ஆலயங்கள் தாக்கப்பட்டதாக எமக்கு முறைப்பாடுகள் கிடைக்கவில்லை. செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு கூட இதுபற்றி முறையிடவில்லை.

கொழும்பில் வாராந்த செய்தியாளர் மாநாட்டில் கூட்டுப்படைகள் தலைமையகப் பேச்சாளர் கேர்ணல் சரத் முனசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார் என்று கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

''கைப்பற்றப்பட்ட பகுதிகளை கட்டுப்பாட்டில் வைத்திருக்க படையினரால் முடியுமா என்ற கேள்வி ஒன்றுக்கு கேர்ணல் சரத் முனசிங்க பதில் அளிக்கையில், இராணுவ உயர் அதிகாரிகள் இந்த விடயங்களை ஆராய்ந்தே நடவடிக்கையைத் திட்டமிடுகின்றனர் என்றார்.

தெல்லிப்பழைப் பகுதியில் பொதுமக்கள் உள்ளனர். எனினும் அவர்கள் வெளியேறி கோயில்களில் தஞ்சம் அடைந்துள்ளனர். இதற்கான அறிவிப்பைத் துண்டுப் பிரசுரங்கள் மூலம் விடுத்தோம்''

[6ஆம் பக்கம் பார்க்க]

# நடமாடும் ஜனாதிபதி செயலகத்தில் முறையிட்டவர் கைது செய்யப்பட்டார்

கொழும்பு, ஜூன் 14

மாவட்ட தொலைத்தொடர்பு திணைக்கள பரிசோதகராகக் கடமையாற்றி, வேலை இழந்திருந்த செந்திவேல் என்பவர் வவுனியாவில் நடமாடும் ஜனாதிபதி செயலக சேவையின் போது அங்கு வந்து தமக்கு வேலை வழங்கும்படி முறையீடு செய்திருந்தார்.

அவரை கொழும்பில் உள்ள தலைமையகத்துக்கு வருமாறு அப்போது தெரிவிக்கப்பட்டது.

வேலையை மீளப்பெற அவர் கடந்த 8ஆம் திகதி கொழும்பில் உள்ள திணைக்களத்துக்கு சென்ற சமயம், பொலீஸார் அவரை அங்கு வைத்துக் கைது செய்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கோட்டை பொலீஸ் நிலையத்தில் அவர் தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ளார். (உ-3)

# வாழைச்சேனை பஸ்ஸில் ஆயுத முனையில் கொள்ளை

## சிப்பாய்களின் கைவரிசையா?

மட்டக்களப்பு, ஜூன், 14

வாழைச்சேனைக்குச் சென்று கொண்டிருந்த பஸ் ஒன்றை வழிமறித்து ஆயுத முனையில் நகை, பணம் ஆகியவை மூவரால் கொள்ளையிடப்பட்டுள்ளன, இராணுவச் சிப்பாய்கள் இந்த கொள்ளையில் சம்பந்தப் பட்டிருக்கலாம் எனப் பொலீஸார் சந்தேகிக்கின்றனர்.

கடந்த வாரம் இடம்பெற்ற இச் சம்பவம் பற்றி தெரிவிக்கப்படுவதாவது:-

வாழைச்சேனை நோக்கிச் சென்று கொண்டிருந்த பஸ் ஒன்றை மின்னேரிய இராணுவ முகாமுக்குச் சமீபமாக ரி 56 ரக ஆயுதங்களுடன் வழிமறித்த மூவர் பஸ்ஸைச் சோதனையிடப் போகிறோம் என்று கூறி, தனியான ஓர் இடத்துக்கு பஸ்ஸைச் செலுத்துமாறு உத்தரவிட்டனர்.

அங்கு வைத்து பயணிகளின் நகைகளையும், 35 ஆயிரம் ரூபாவுக்கு மேல்பட்ட பணத்தையும் அவர்கள் கொள்ளையடித்தனர்.

இக் கொள்ளையை இராணுவத்தினரே நடத்திருக்கக் கூடும் என சந்தேகிக்கும் பொலீஸார் இராணுவப் பொலீஸாரின் உதவியை நாடியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது [ஒ-த-3]

# சிறுநீரகத்தில் தோன்றும் கற்களை அறுவை சிகிச்சை இன்றி அகற்றலாம்

கொழும்பு, ஜூன் 14

சிறுநீரகத்தில் உள்ள கற்களை அறுவைச் சிகிச்சை இன்றி வெளியேற்றிவிடும் Lithotripter Machine என்ற பெயரிலான (Kidney Stone Crusher) இயந்திரம் ஒன்று கொழும்பு பெரியாஸ்பத்திரியில் கடந்த செவ்வாய்க் கிழமை முதல் இயங்க ஆரம்பித்துள்ளது.

இந்த இயந்திரத்தின் விலை 5 கோடி 50 லட்சம் ரூபா ஆகும். இது போன்ற இயந்திரம் ஒன்று கண்டி பெரியாஸ்பத்திரியில் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

இவ்விரு இயந்திரங்களும் ஜேர்மன் அரசினால் நன்கொடையாக வழங்கப்பட்டது.

இவ்விரு இயந்திரங்களும் 5 ஆண்டுகளுக்கு வெளிநாட்டு தொழில் நுட்பவியலாளர்களால் இயக்கப்படும் என்றும், அதன் பின்னரே உள்ளூர் அதிகாரிகளின் பொறுப்பில் ஒப்படைக்கப்படும் என்றும் கொழும்பு பெரியாஸ்பத்திரி பணிப்பாளர் டாக்டர் ஒலிவர் பெர்னாண்டோ தெரிவித்தார்.

சிறுநீரகம் மற்றும் சிறுநீரகப் பையில் கற்கள் உள்ள நோயாளர்களுக்கு 24 மணி நேரத்தில் நோயின்றி சிகிச்சை அளிக்க இந்த இயந்திரம் உதவுகிறது

பெரிய திரை ஒன்றுடன் இந்த இயந்திரம் இணைக்கப்பட்டிருக்கும். இந்த இயந்திரத்தின் மீது நோயாளர் படுக்க வைக்கப்படுவார். அப்போது நோயாளியின் உடலில் கல் உள்ள இடம் திரையில் தெரியும். அதனைக் கண்டுபிடித்தவுடன், அதிர்ச்சி அலை இயந்திரத்தில் இருந்து எழும்பி அக்கல்லைக் கரைத்து விடும். பின்னர் அக்கல்லின் தூள்கள் சிறுநீருடன் வெளியேற்றப்பட்டு விடும் என்றும் பணிப்பாளர் சொன்னார்.

பெரிய அறுவைச் சிகிச்சைகளை செய்து கொள்ள உடல் நிலை இடமளிக்காது அவதிப்படும் இருதய நோயாளிகளுக்கு சிறுநீரகக்கல் சிகிச்சையை மேற்கொள்ள இந்த இயந்திரம் உதவுகிறது என்றும் அவர் சொன்னார்.

# நேற்றைய விபத்துகளில் 7 பேர் படுகாயம்

யாழ்ப்பாணம், ஜூன் 14

வடக்கில் நேற்று வெவ்வேறு இடங்களில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்துக்களில் படுகாயமடைந்த 7 பேர் நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

புத்தூர் பருத்தித்துறை வீதியில் இடம்பெற்ற விபத்தில் காரைநகர் தோப்புக்காட்டைச் சேர்ந்த வேலும் மயிலும் ரகுணதாஸ் [வயது 20], தர்மகுணராசா மங்களேஸ்வரன் [வயது 20] ஆகியோரும் —

நுணாவிலில், இடம்பெற்ற விபத்தில் ஐயம்பிள்ளை குமரய்யா [வயது 50], வயோதிப மாதுவான கார்த்திகேசு இரத்தினம் [வயது 60] ஆகியோரும் —

பளையில் இடம்பெற்ற விபத்தில் வேம்பொடுகேணியைச் சேர்ந்த கி. கிருஷ்ணபிள்ளை [வயது 40] என்பவரும் —

அச்சுவேலியில் இடம்பெற்ற விபத்தில் சிவசுந்தரம் ரூபலிங்கம் (வயது 12], கொக்குவிலைச் சேர்ந்த எஸ். பரமசிவம் ஆகியோரும் படுகாயமடைந்தனர். [உ-15]

# 21 பேருக்கு சன்மானம்

ராஜீவ் கொலையில் குற்றஞ் சாட்டப்பட்ட சிவராசன், சுபா ஆகியோர் பற்றித் தகவல் கொடுப்போருக்கு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்த 15 லட்சம் ரூபா பணம் 21 பேருக்குப் பகிர்ந்தளிக்கப்படுவதாக சிறப்புப் புலனாய்வுக் குழுவின் தலைவர் திரு. கார்த்திகேயன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் பல்வேறு இடங்களிலும் இருந்து கிடைத்த தகவல்களின் அடிப்படையில் கோயம்புத்தூரிலும், பெங்களூரிலும் சிவராசன், சுபா ஆகியோரை பிடிப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட புலனாய்வுக் குழுவுக்கு முடிந்தது என்றும் அவர் சொன்னார். (இ-5)

# வெள்ளம் பற்றி நாடாளுமன்றில் விவாதம்?

கொழும்பு, ஜூன் 14

கொழும்பு மாநகரில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்திற்கான காரணங்கள் குறித்து விவாதம் நடத்துவதற்கு அனுமதியளிக்கும்படி கோரி எதிர்க்கட்சித் தலைவரும் மற்றும் ஏழு சுதந்திரக்கட்சி எம். பிக்களும் கூட்டாக சபாநாயகருக்குக் கடிதம் எழுதியுள்ளனர்.

திட்டமிடப்படாத முறையில் வீடுகள் மற்றும் கட்டடங்கள் கட்டப்பட்டது பற்றியும் —

நகர அபிவிருத்தி அதிகார சபையின் சட்ட விதிகள் இது விஷயத்தில் மீறப்பட்டிருப்பதாகவும் அக் கடிதத்தில் தெரிவிக்கப்படுகிறது [உ-எ]

# உடுகம் பொலவுக்கு பகிரங்க பிடி விறாந்து!

முன்னாள் பிரதிப் பொலீஸ் மாஅதிபர் திரு பிரேமதாஸ உடுகம்பொலவைக் கைது செய்ய கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி திருமதி ஷிராணி திலகரத்னா பகிரங்க பிடி விறாந்து உத்தரவை பிறப்பித்துள்ளார்.

உடுகம்பொல மீதான வழக்கு கடந்த புதன் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது (ஓ-த)

# மரண அறிவித்தல்கள்

## இராஜசயா மகாலிங்கம்
## திருமதி சிவபாக்கியம் மகாலிங்கம்
## செல்வி மதனசலா மகாலிங்கம்
## மருமகன் சபாரத்தினம் சுபாஸ்சந்திரன்

தெல்லிப்பழை, வீமன்காமத்தைச் சொந்த வசிப்பிடமாகக் கொண்ட இ. மகாலிங்கம் [காங்கேசன் சிமெந்து கூட்டுத்தாபன ஓய்வுபெற்ற மேற்பார்வையாளர்], அன்னாரது மனைவி சிவபாக்கியம் [அம்மாக்கா], மகள் செல்வி மதனகலா மற்றும் அன்னாரது மருமகன் சபாரத்தினம் சுபாஸ்சந்திரன் [வதிரி, கரவெட்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற மலாயன் பென்சனியர் திரு. திருமதி சபாரத்தினத்தின் மகன்] ஆகியோர் கடந்த 10 06 92 மாலை 4-45 மணியளவில் தெல்லிப்பழை, துர்க்காபுரத்தில் இடம்பெற்ற விமானக்குண்டு வீச்சின்போது அகால மரணம் அடைந்தனர்.

இவர்களது மரணச் சடங்குகள் யாவும் யாழ். வளாக வீதி, திருநெல்வேலியிலுள்ள அன்னாரது மகனாகிய மகாலிங்கம் குபேந்திரதாஸ் [ரவி] அவர்களது இல்லத்தில் 11-06-92 அன்று நடைபெற்று பூதவுடல்கள் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டன என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல் :
மகாலிங்கம் குபேந்திரதாஸ் [ரவி]

யாழ். வளாக வீதி,
திருநெல்வேலி.

[21387]

## பொன்னம்பலம் நடராசா
(மலாயன் பென்சனியர்)

உடுப்பிட்டியை பிறப்பிடமாகவும் கதிரிப்பாய் அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் நடராசா 13-06-1992 சனிக்கிழமை காலை காலமாகிவிட்டார். அன்னார் காலஞ் சென்ற சின்னம்மாவின் அன்பு கணவரும், விக்னேஸ்வரன், லோகேஸ்வரன் (லண்டன்], லோகேஸ்வரி (அவுஸ்திரேலியா), தேவஞானி (மலேசியா) ஆகியோரின் அன்பு தந்தையும், ஞானசௌரி (சுருக்கெழுத்தாளர், கமநல சேவை திணைக்களம்), யாழினி (லண்டன்), முகுந்தன் (பொறியியலாளர் - அவுஸ்திரேலியா), மோகனதாஸ் (கணக்காளர் - மலேசியா) ஆகியோரின் அன்பு மாமனாரும், விஷ்ணு, நிமலன், ரன்யிந்ரா, வைதேகி, கார்த்திகேயன் ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 13-06-1992 சனிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் உடுப்பிட்டியில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் யாபேருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்;
ந. விக்னேஸ்வரன்.

உடுப்பிட்டி.

[21388]

## சபாரத்தினம் சுபாஸ்சந்திரன்

வதிரியை பிறப்பிடமாகவும், மல்லாகத்தைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்டிருந்த சுபாஸ்சந்திரன் [சந்திரன்] துர்க்காபுரத்தில் இடம்பெற்ற குண்டு வீச்சில் அகால மரணமானார். அன்னார் சசிகலாவின் கணவரும், விஜய், ஷர்மினி, சுரோபினி, நிரோபினி ஆகியோரின் தந்தையும், வதிரியைச் சேர்ந்த காலஞ்சென்ற மலாயன் பென்ஷனியர் சபாரத்தினம் தம்பதிகளின் மகனும், அகால மரணமடைந்த மகாலிங்கம் தம்பதிகளின் மருமகனும், ஜெகதீசன், ஜெயராணி, அரசன் [வதிரி] காலஞ்சென்ற வீரேசன் மற்றும் ஜெயதேவி, ஜெயகுமாரி, கணேஷன், ஜெயசோதி, ஜெயமணி, இந்திரன் (நல்லூர்), ரவீந்திரன் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் மரணச்சடங்குகள் 10 06-1992 அன்று கொக்குவில் இந்து மயானத்தில் நடைபெற்றன.

தகவல்;
இந்திரன் [நல்லூர்],
அரசன் [வதிரி]

138/8, நல்லூர் வடக்கு வீதி,
நல்லூர்.

(21386)

## திருமதி பராசக்தி சதாசிவம்

சீரணிச் சந்தி சண்டிலிப்பாயைச் சேர்ந்த திருமதி பராசக்தி சதாசிவம் 9 6 92 இல் காலமானார்.

அன்னார் க. சதாசிவம் [ஓய்வுபெற்ற பிரதம கணக்காளர்] அவர்களின் அன்பு மனைவியும், சிவசக்திநாதன் [கணக்காளர் நமுனுகுல], சதாசக்திநாதன் [விவசாய உத்தியோகத்தர், நுவரெலியா], சிவசக்திதேவி [ஆசிரியை, பண்ணாகம் மெய்கண்டான் ம. வி.] சிவசோதி [லண்டன்], ஆகியோரின் அருமைத் தாயாரும் இந்திரபுவனம், புஷ்பலோஜனி [ஆசிரியை, நுவரெலியா கொன்வென்ட்], கேதீஸ் [பொறியியலாளர் - லண்டன்] ஆகியோரின் மாமியாரும், ரபீந்திரநாத், சிவாகினி, சிவதர்ஷனி, டயான் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

ஈமக்கிரியைகள் இன்று [14-6-92] ஞாயிறு காலை 8 மணியளவில் சீரணிச் சந்தி சண்டிலிப்பாயில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
செல்வி சி. சதாசிவம் [மகள்]

சீரணிச் சந்தி,
சண்டிலிப்பாய்.

[21392]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1989 தேர்தலில் சு. கவுக்கு கே. ஜி. பி. நிதி வழங்கியது!

## 'இந்து' பத்திரிகை தகவல்

புதுடில்லி, ஜூன் 14

முன்னாள் சோவியத் யூனியனின் உளவு ஸ்தாபனமான கே. ஜி. பி., 1989 தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கு நிதி உதவி வழங்கியது.

கடந்த வியாழன் வெளியான "இந்து" பத்திரிகை இவ்வாறு செய்தி வெளியிட்டுள்ளது.

"இந்தியாவிலும் இலங்கையிலும கே. ஜி. பியின் கரம்" என்ற தலைப்பில் இச்செய்தி வெளியாகி உள்ளது

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா முன்னர் நடந்த தேர்தலில் பெற்ற ஆசனங்களிலும் பார்க்க 8 படங்கு அதிகமான ஆசனங்களைப் பெற இந்த நிதி உதவியதாக கே. ஜி. பியின் முன்னாள் தலைவர் விளாடிமிர் குர்க்கோ அப்போதைய சோவியத் ஜனாதிபதி மிக்கெயில் கோர்பச்சேவுக்கு அறிவித்திருந்தார் என்றும்—

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலும், ஐக்கிய தேசியக் கட்சியிலும் உள்ள கே. ஜி. பிக்கு விசுவாசமானவர்கள் எம். பிக்களாவதற்கு கே. ஜி. பி. பண உதவி செய்வதாகவும் விளாடிமிர் குர்க்கோ தெரிவித்திருந்தார் என்று "இந்து" பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

கே. ஜி. பி. அளித்த ஆதரவுக்காக சோவியத் யூனியனுக்கு அப்போது திருமதி பண்டாரநாயக்கா நன்றி தெரிவித்திருந்தார் என்றும்—

மேற்கத்திய சார்பான வெளிநாட்டுக் கொள்கையையும்—

ஆளும் ஐக்கிய தேசியக்கட்சியின் ஜனநாயக விரோத போக்கையும் — தடுக்க, நாடாளுமன்றத்தில் கிடைத்த அதிகரித்த செல்வாக்கை தனது கட்சி சாதகமாகப் பயன்படுத்தும் என்று உறுதியளித்தார் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ-த]

## வருடாந்த விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், ஜூன் 14

திருநெல்வேலி ஞானக் குழந்தை இல்லம் பாலர் பாடசாலையின் முதலாவது வருடாந்த விளையாட்டுப் போட்டி, இன்று பிற்பகல் 2-30 மணிக்கு சிவன்கோவில் வீதி, திருநெல்வேலியில் திருமதி திருச்செல்வம் சாந்தினி தலைமையில் நடைபெறும். [த]

## நூல் வெளியீடும் ஆய்வரங்கும்

யாழ்ப்பாணம், ஜூன் 14

"எமது உணவுத் தேவையும் உற்பத்தி இலக்குகளும்" நூல் வெளியீட்டு விழாவும், ஆய்வரங்கும் எதிர்வரும் 17 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெறும்.

இளைப்பாறிய விவசாய உதவிப் பணிப்பாளர் திரு. சி. ஜெயரட்ணம், யாழ் பல்கலைக்கழக பொருளியற்றுறை விரிவுரையாளர் திரு. க. கந்தையா, யாழ். கச்சேரி திட்டப் பணிப்பாளர் திரு. செ. பத்மநாதன், வைத்திய கலாநிதி முருகானந்தன் ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்துவர். [இ]

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 14

"டொனால்ட் கணேஷ்குமார்" ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தப்படும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கிரிக்கெட் போட்டித் தொடரின் இறுதியாட்டம் இன்று காலை 9 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

இறுதியாட்டத்தில் யாழ். சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யாழ். ஜொலிஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதுகிறது.

இந்தப் போட்டிக்கு பிரதம விருந்தினர்களாக யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகரும், திருமதி வை. மாணிக்கவாசகரும் பங்குபற்றுவர்.

★ ★ ★

நவாலி வளர்மதி சனசமூக நிலையம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இரண்டு ஆட்டங்கள் இன்று நடைபெறவிருக்கின்றன.

மானிப்பாய் இந்துக்கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இன்று பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும் முதலாவது ஆட்டத்தில் அராலி ஏ. எல். விளையாட்டுக்கழக அணியை எதிர்த்துக் காணும் விளையாட்டுக்கழக அணி மோதும். மாலை 4 மணிக்கு நடைபெறும் இரண்டாவது ஆட்டத்தில் ஈச்சமோட்டை ஐக்கிய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் எவரெஸ்ட் விளையாட்டுக் கழக அணி மோதும். [இ]

## 'பலவேகய'வில் பங்கு வகித்த முக்கியஸ்தரும் பலியானார்

கொழும்பு, ஜூன் 14

கடந்த புதன்கிழமை பூநகரியில் இடம்பெற்ற கண்ணி வெடித் தாக்குதலில் பலியான லெப்டினன்ட் கேர்ணலின் பெயர் சித்திரா புஞ்சிஹேவா என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதலில் மூன்று படை அதிகாரிகள் உட்பட மொத்தம் ஐந்து படையினர் கொல்லப்பட்டனர் என்று தற்போது அறிவிக்கப்படுகிறது.

இராணுவக் கப்டன் எஸ். கருணாரத்தின, கடற்படை அதிகாரி லெப்டினன்ட் அஞ்சனா திஸநாயக்கா ஆகியோரே இதில் பலியான ஏனைய இரு அதிகாரிகளும் ஆவர்.

கொல்லப்பட்ட மற்றும் இருவர் சாதாரண இராணுவச்சிப்பாய்கள் என்று தெரிவிக்கப் படுகிறது.

வடக்கில் – ஆனையிறவில் நடந்த 'பலவேகய' தாக்குதலில் லெப்டினன்ட் கேர்ணல் புஞ்சிஹேவா முக்கிய பங்கு வகித்தவர் என்றும் அதற்காக அவருக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டிருந்தது என்றும் தெரிவிக்கப்படுகிறது. [இ-3]

## பூஸா முகாமில் ஆயுதங்கள்: பொலீஸார் கைப்பற்றினர்

பூஸா தடுப்பு முகாமில் இருந்து ஒருதொகை ஆயுதங்களை காலி பொலீஸார் கடந்த புதன்கிழமை கைப்பற்றினா.

இரண்டு வாள், மண் நிரப்பப்பட்ட 18 போத்தல்கள், 5 எஸ்லோன் பைப்புகள், 9 இரும்புக் கம்பிகள், நுனிப் பக்கம் தீட்டி கூராக்கப்பட்ட 24 கம்பிகள், அசிட்டினால் நிரப்பப்பட்ட ஒரு தொகை பல்புகள் என்பனவே கைப்பற்றப்பட்டவை ஆகும்.

இது தொடர்பான விசாரணையை பொலீஸார் மேற்கொண்டுள்ளனர். [த-3]

## புலிகளை அழித்தபின் தீர்வு; சிங்கள அமைப்பு ஆதரவு

கொழும்பு, ஜூன் 14

விடுதலைப் புலிகள் முற்றாக அழிக்கப்பட்ட பின்னரே அரசியல் தீர்வுக்கான பேச்சுகள் நடத்தப்படும் என்று அரசாங்கம் தீர்மானித்திருப்பது மகிழ்ச்சி தருவதாக இருக்கிறது.

"சிங்கள ஆரக்ஷக சங்விதானய" தலைவரும், முன்னாள் அமைச்சருமான காமினி ஜெயசூரியா இப்படி தெரிவித்தார் என்று 'த ஐலண்ட்' செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிங்களவர் பாதுகாப்பு அமைப்பு [சிங்கள ஆரக்ஷக சங்விதானய]தோன்றிய நாள் முதலே, அரசாங்கம் தற்போது எடுத்துள்ள நிலைப்பாட்டையே, தனது கொள்கையாக அது கடைப்பிடித்து வருகிறது என்றும் திரு. காமினி ஜெயசூரியா சொன்னார்.

வடக்கு — கிழக்கு இணைப்பை நாட்டின் பெரும்பான்மையான மக்கள் எதிர்க்கின்றனர் என்பதை அரசாங்கம் மனதில் வைத்துக் கொள்ள வேண்டும்.

பாரம்பரிய தாயகம் என்ற கொள்கையை வடக்கு—கிழக்கில் உள்ள சகல அரசியல் கட்சிகளும் கைவிட வேண்டும்.

திருப்திகரமான பலன் தரும் பூரண தீர்வு ஒன்றுக்கு இனரீதியான அடிப்படையில் எல்லைகள் நிர்ணயிக்கப்படக் கூடாது.

விடுதலைப் புலிகளை முற்றாக அழிக்க வேண்டும் என்று பதில் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ஜோன் அமரதுங்கா கூறியிருப்பதை நான் வரவேற்கின்றேன் — இப்படி திரு. ஜெயசூரியா மேலும் சொன்னார். [உ-எ]

## வவுனியா இளைஞர் மதுரையில் கைது

சென்னை, ஜூன் 14

வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த தமிழ் இளைஞர் ஒருவர் நேற்று முன்தினம் மதுரையில் வைத்துக் கைது செய்யப்பட்டார்.

சந்தேகிக்கத்தக்க வகையில் நடமாடிக் கொண்டிருந்த இந்த இளைஞரிடம் செல்லத்தக்க பாஸ்போர்ட், வீசா போன்ற ஆவணங்கள் எதுவும் இருக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. [த]

## கஞ்சிகுடிச்சாறில் மேற்கொள்ளப்பட்ட "ஸ்டார்லைற்" நடவடிக்கை மழையால் கைவிடப்பட்டது!

### படை வட்டாரங்கள் தகவல்

கொழும்பு, ஜூன் 14

மட்டக்களப்பு மாவட்டம் கஞ்சிகுடிச்சாறு காடுகளில் 'ஸ்டார்லைற்' பெயரில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கை கடந்த செவ்வாய்க்கிழமை மாலையுடன் கைவிடப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

அந்த நடவடிக்கையை விசேட அதிரடிப் பொலீஸ் கொமாண்டோக்கள் மேற்கொண்டனர்.

கடந்த 4 ஆம் திகதி கஞ்சிகுடிச்சாறு காட்டுப்பகுதியில் நுழைந்த பொலீஸ் கொமாண்டோக்கள், கடும்மழை காரணமாக கடந்த செவ்வாய் மாலை தங்கள் நடவடிக்கைகளைக் கைவிட்டு காட்டுப் பகுதியில் இருந்து வாபஸ் வாங்கினர் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

காட்டுக்குள் விடுதலைப் புலிகள் நிறையப் பொறி வெடிகளை வைத்திருந்தனர் என்றும் —

ஒரு சந்தர்ப்பத்தில் நீரோடை ஒன்றைச் சுற்றி மூன்று கிரனேட் நெக்லஸ்களை (Grenade Necklaces) வைத்திருந்தனர் என்றும் —

தண்ணீர் எடுக்க படையினர் அங்கு வருவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டே அக்கிரனேட் நெக்லஸ்கள் வைக்கப்பட்டிருந்தன என்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

கொமாண்டோக்களுடன் சென்ற நாய் ஒன்று பொறி வெடிகளைக் கண்டு பிடித்ததைத் தொடர்ந்து கொமாண்டோக்கள் உஷார் அடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

## முகாமைத்துவ பட்டதாரிப் பயிலுநருக்கு தொடர்ந்தும் சம்பளம்

யாழ் மாவட்ட செயலகங்களில் கடமையாற்றிய முகாமைத்துவப் பட்டதாரிப் பயிலுநர்களுக்கு தொடர்ந்து சம்பளம் வழங்க யாழ். அரச அதிபருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் அரச அலுவலகங்களுக்கு நியமிக்கப்பட்ட இவர்கள் இரண்டு வருட பயிற்சிக் காலத்தை மார்ச் மாதத்துடன் முடித்துக் கொண்டனர்.

அவர்களில் சிறுதொகையினருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டது. ஏனையோரின் சம்பளம் நிறுத்தப்பட்டது.

யாழ். அரச அதிபர் இது விடயம் சம்பந்தமாக கொழும்பில் பேச்சு நடத்தியதைத் தொடர்ந்து மே மாதம் தொடக்கம் அவர்களுக்கு சம்பளம் வழங்கும்படியும், ஓரிரு மாதத்தில் அவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-3)


### புங்குடுதீவு - நயினாதீவு ப. நோ. கூ. சங்கம் (வ. து)
### சகல பொதுச் சபை பிரதிநிதிகளுக்கும் விசேட பொதுக்கூட்ட நிகழ்ச்சி நிரல்

காலம்; 28 — 06 — 1992ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9-00 மணி

இடம்: 201/1, 3ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம், சங்க தலைமைக் காரியாலயம்.

தலைவர்: திரு. ப. கனகலிங்கம் அவர்கள், தவறாது சமுகம் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

01. இறைவணக்கம்
02. தலைவர் முன்னுரை
03. கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரின் உரை
04. சென்ற விசேட பொதுக்கூட்ட அறிக்கை வாசித்தல்
05. 1992/93ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை அங்கீகரித்தல்
06. 1992/93ஆம் ஆண்டுக்கான உச்சக் கடன் எல்லையை அங்கீகரித்தல்
07. பொதுச் செலவுகளை அங்கீகரித்தல்
08. இராணுவ நடவடிக்கையின் போது ஏற்பட்ட இழப்புக்கள், நட்டங்கள் பற்றிய மதிப்பீட்டு அறிக்கையை தெரியப்படுத்தல்
09. புதிதாக 10 அந்தர் மேடைத் தராசு, பணம் வைக்கும் இரும்புப் பெட்டி ஆகியன கொள்வனவு செய்வது பற்றி ஆராய்தல்
10. 1989/90 ஆம் ஆண்டுக்குரிய எண்பார்வை அறிக்கையை அங்கீகரித்தல்
11. பொதுச் செலவுகளுக்கு முன் அனுமதி பெறல்
12. விற்பனைத் திணைக்கள லொறி இல. 26/1039 கொள்வனவு செய்தல்
13. தளபாடங்கள் கொள்வனவு செய்த தொகையை அங்கீகரித்தல்
14. செயலாளர் நன்றியுரை.

செயலாளர்,
புங்குடுதீவு-நயினாதீவு ப.நோ.கூ.-
1992 - 06 - 13 சங்கம், யாழ்ப்பாணம்.

குறிப்பு: மேலதிக விவரங்கள் தேவைப்படின் மேற்குறிப்பிட்ட விலாசத்தில் காரியாலய நேரத்தில் செயலாளருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

[சி-2113]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

அழகிய பொமனேரியன் நாய்க்குட்டிகள், பூச்சி நீக்கியவை. அவற்றுடன் கலர் மீன்களுடன் மீன் தொட்டியும் விற்பனைக்கு உண்டு. செ. ஆனந்தன், தாமோதரம்பிள்ளை வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி
(21374]

அன்ரன் பாலசிங்கம் எழுதிய ''தொண்டமானின் சமரச முயற்சியும் சிங்களப் பேரினவாதமும்'', ''கஸ்தூரியின் ஆக்கங்கள்'' (கவிதைகள், சிறுகதைகள்] ஆகிய நூல்கள் விற்பனையாகின்றன. பிரபல புத்தகசாலைகளில் கிடைக்கும்.
(21368)

வெள்ளை-கறுப்பு, கறுப்பு-வெள்ளை கலந்த நிறங்களில் பொமனேரியன் நாய்க்குட்டிகள், சைனீஸ், பான்ரெயில் பெரிய இனப் புறாக்கள், பன்ரம் சேவல், கோழி, குஞ்சுகள், வெள்ளை சாம்பல் நிற இனிக் கோழிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 887, ஆஸ்பத்திரி வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
[4757]

பென்ரம் (Bantam) பாமாஸ் (Bhamas) கோழிகள் விற்பனைக்குண்டு. பதினொரு மாதம் முதல் பதின்மூன்று மாதங்கள் நிரம்பியவை. முட்டை இட்டுக் கொண்டிருப்பவை. தொடர்பு கொள்ளவும்: கிவீ படப்பிடிப்பாளர்கள், 131/1, அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம்.
[21389]

### கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு

கோல்டன் கொமெற் பேட்டுக் குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. ஓடருக்கும் எடுத்துக் கொடுக்கப்படும். காலை 6-00 மணி தொடக்கம் 11-00 மணி வரை. தொடர்பு கொள்ளவும். ரவி றேடர்ஸ், பழக்கடை, திருநெல்வேலிச் சந்தி.
[21339]

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை.

**பட்டப்பின் கல்வி டிப்ளோமா**

**பகுதி நேர / முழு நேர அனுமதித் தேர்வு**

மேற்குறித்த நெறிக்கான அனுமதிப் பரீட்சை 21 - 06 - 1992 (ஞாயிறு) யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் காலை 9-00 மணிக்கு நடைபெறவுள்ளது. தகுதியான பரீட்சார்த்திகளுக்கு தபால் மூலம் அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டுள்ளன. உரிய நேரத்தில் அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாதோர் 20 - 06 - 1992 இற்கு முன் கிழமை நாட்களில் வழமையான காரியாலய நேரத்தில் யாழ். பல்கலைக்கழக பரீட்சைக் கிளையுடன் தொடர்பு கொள்ளவும்.

- பதிவாளர்.

[சி-2103]

### மணப்பெண்கள் தேவை

குற்றமற்ற 27 வயது அரசாங்க உத்தியோகத்தருக்கும், 37 வயது B. Sc. சிவில் பொறியியலாளருக்கும், 35 வயது கணக்காளருக்கும், 32 வயது ஆசிரியருக்கும் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்.
[21385)

### மணப்பெண் தேவை

வெளிநாட்டில் உதவிக் கணக்காளர், வயது 36, நட்சத்திரம்: பூசம், இலக்கினம் சிங்கம், செவ்வாய்க் குற்றம் இல்லை. மணப்பெண் குறிப்பாக, ஏப்ரல் 18 - மே 13, 1963க்கு இடையில் பிறந்தோர்க்கு முதலிடம். 5' 3'' இற்கு குறையாத கவர்ச்சியான உயரம். திருமணம் இலங்கையில். ஜூன் 18க்கு முன் தொடர்பு கொள்க. இல. 416, மே/பா உதயன்.
[21350]

### மணமக்கள் தேவை

இந்து, 4 இல் செவ்வாயுள்ள 27 வயது பட்டதாரி ஆசிரியைக்கும், கனடா சிற்றிசன் 37, 36, 34 வயதுள்ள கத்தோலிக்க ஆண்களுக்கும். குற்றமுள்ள சைவபோசன 36 வயதான வங்கி உத்தியோகத்தருக்கும் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம்.
(21384)

### ஜோதிடம்

உங்களுக்குரிய சகல கஷ்டங்களும் பிரச்சினைகளும் தீர சாதகத்துடன் வரவும். ஸ்ரீமாவை விநாயகப் பெருமானின் அருட்சக்தி பொய்யாமொழியாக வழங்குகிறது. பலன் தவறினால் பணம் திருப்பப் பெற உத்தரவாதம். ஸ்ரீ மாவை விநாயகர் சோதிட நிலையம், இல. 96, கோவில் வீதி, (ஸ்ரீ கைலாச பிள்ளையார் கோவில் சந்தி] நல்லூர்.
(21378]

### புலமைப் பரிசில் பரீட்சை

ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான விசேட வினாத்தாள்கள் பெற்றுக் கொள்ளலாம். விடையளித்துத் தந்தால் இலவசமாகத் திருத்திக் கொடுக்கப்படும். Bond Institutes, 58ஃ, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
[4755]

### கல்வி

G. C. E. (O/L) இல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இதுவரை சித்தி அடையாதவர்களுக்கும், ஆரம்ப அறிவின்றிக் குறைந்த புள்ளிகளைப் பெற்றவர்களுக்கும் 25 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் விசேட சித்திக்குக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, சுண்டிக்குளி.
[21383]

### வர்ம சிகிச்சை

நீண்ட காலம் மாறாத, மாற்ற முடியாத அல்லது நோய் நிதானம் செய்யமுடியாத எந்த வகையான நோய்களாக இருந்தாலும், பாரம்பரிய வைத்திய முறையான வர்ம சிகிச்சை எனப்படும் தமிழ் அக்குபங்சர் முறை மூலம் அதிசயிக்கத்தக்க விதத்தில் குணமாக்கப்படும்.

**Dr. V. P. சுந்தரராஜன்,**
சாயி மெடிக்கல் அக்கடமி,
இல. 6, பருத்தித்துறை வீதி (1ஆம் ஒழுங்கை),
யாழ்ப்பாணம்.

[சி-2615]

### O/L - 92 வினாத்தாள்

O/L Dec. 92 பரீட்சைக்குத் தயாராகும் மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் பெற்றுக் கொள்ளலாம். விடையளித்துத் தந்தால் இலவசமாகத் திருத்திக் கொடுக்கப்படும். பரீட்சைப் பகுதி, Bond Institutes, யாழ்ப்பாணம்.
[4754]

## பட்டதாரிகளுக்கு தொழிற் பயிற்சி

கொழும்பு, ஜூன் 14

இலங்கை தேசிய வர்த்தகச் சேம்பர் நிறுவனம் நாட்டின் சகல மாவட்டங்களில் இருந்தும் 195 பட்டதாரிகளைத் தெரிவு செய்து அவர்களுக்குத் தொழிற் பயிற்சி வழங்க முன்வந்துள்ளது.

இதில் வடக்கு - கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த 23 பட்டதாரிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். [த]

## University of Jaffna

### Tender Notice

Tenders are invited for the following from contractors registered for building works with University of Jaffna or ICTAD.

1. Repairs to hostel at Jaffna town - Stage 1
2. Temporary rest room near health centre.

Tender forms can be obtained from Works Engineer, University of Jaffna from 17-06-1992—19-06-1992 during working hours on producing a receipt from Bursar, University of Jaffna for the following for each tender.

Non-refundable deposit — Rs. 200/-

Refundable deposit — Rs 2.000/-

Perfected tenders should be sent to reach the Registrar, University of Jaffna on or before 02-07-1992 at 10-00a.m.

Tender Board, University of Jaffna reserves the right to reject any tender.

— Registrar.

University of Jaffna.
Thirunelvely,
Jaffna.

(C-2105)

## வல்வை வாசி கொழும்பு ரயிலுக்குப் பலி

கொழும்பு, ஜூன் 14


உறவினர் ஒருவரை வெளிநாட்டுக்கு அனுப்புவது சம்பந்தமான அலுவல்களை கவனிக்க கொழும்பு வந்திருந்த வல்வெட்டித்துறை வாசி ஒருவர் கடந்த புதன்கிழமை வெள்ளவத்தையில் ரயில் பாதையைக் கடக்க முற்பட்ட சமயம் ரயிலில் மோதி மரணமானார்.

வல்வெட்டித்துறை ஆதி கோவிலடியைச் சேர்ந்த சுப்பிரமணியம் சுந்தரலிங்கம் [39 வயது] என்பவரே மரணமானவராவார். (இ-3)

## கிருபா நகை மாளிகை

★ அழகின் நிழல் மாடம்
★ அனுபவமிக்க தொழில் நுட்பத்தின் எதிரொலி ம்
★ உங்கள் ரசனைக்கு ஏற்ற மோஸ்த்தர்கள்
★ காலத்தால் அழியாத தரத்தில்
★ மாற்றுக் குறையாத அசல் தங்கத்தில்

நவ நாகரீக மங்கைகள்
வட தமிழீழத்தில் நாடவேண்டிய மாளிகை



நயம், நம்பிக்கை, நாணயத்தின் சின்னம்

**கிருபா நகை மாளிகை**

உரிமையாளர்
அனைவருக்கும் நன்கு பழகிய முகம்
மு. கிருபாலன்,
294, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

முக்கிய குறிப்பு:
ஓடர்கள் குறித்த தவணையில் செய்து தரப்படும்.

[சி-2678]

## ஓராண்டு நினைவஞ்சலி



அன்னையின் மடியில்:
**1973 — 09 — 16**

ஆண்டவன் அடியில்:
**1991 — 06 — 26**

செல்வி
**வர்ணலா செல்லத்துரை**
திதி: 1992 — 06 — 14

ஆண்டொன்று சிட்டாகப் பறந்தாலும், எங்கள் உளம் வேதனையில் மாறாது. நினைவிலும், நான் அழியாது வர்ணிக்க முடியாத வனப்பமைந்த வர்ணலாவே நிலவாக விளங்கி யொளிர்! தென்றலாய் குளிர வைத்தோ கரவாகக் கரந்து விட்டாய். காலமெலாம் கரைந்துருகி ஆழ்கின்றோம், அழிதுயரில் ஆற்றுவார் யாருமில்லை.

உன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உன் பிரிவால் துயருறும்:
ஐயா, அம்மா,
அண்ணாமார் - மகேந்திரன், யேந்திரன்,
அக்காமார் - வசந்தி, வதனி, வனிதா, வற்சலா,
தம்பி - சுவீந்திரன்.

'பார் லேன்',
தெல்லிப்பழை.

[20595]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

## உதயன்

### சணம் பித்தம்; சணம் வாதம்!

இனப்பிரச்சினை சம்பந்தமாக அரசாங்கத் தலைவர்களும், அதிகாரிகளும் கூறிவரும் கருத்துக்களும், தகவல்களும் குழப்பம் மிகுந்தவையாக உள்ளன.

விடுதலைப் புலிகளிடம் இருந்து ஆயுதங்களைக் களைந்து அவர்களை அரசியல் ரீதியான ஒரு முடிவுக்கு இணங்கச் செய்வது. அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு சகல முயற்சிகளையும் மேற்கொள்வது — இந்த இரட்டை அணுகுமுறையையே அரசு கையாளப்போவதாக அமைச்சர் ரணில் பத்து நாட்களுக்கு முன் கூறியிருந்தார்.

முதலில் அரசின் முழுப் படைபலத்தையும் பாவித்து விடுதலைப் புலிகளை ஒழிப்பது. அதன் பின்னர் இரண்டாவது கட்டமாக அரசியல் தீர்வு காண முயற்சிப்பது — என்று பதில் துணைப் பாதுகாப்பு அமைச்சர் ஜோன் அமரதுங்கா இப்போது சொல்கிறார்.

புலிகள் இனப்பிரச்சினைக்குரிய தீர்வுத் திட்டத்தை முன்வைக்க வேண்டும். இல்லையேல் இராணுவ நடவடிக்கை எடுக்கப்படும்—என்றும் அதே அமைச்சர் மிரட்டுகிறார்.

அதேவேளை தெரிவுக் குழுவுக்குப் புறம்பாகப் புலிகளுடன் அரசு பேசமாட்டாது என்று ஜனாதிபதியின் ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் கூறுகிறார்.

ஜனாதிபதி பிரேமதாசாவோ அரசியல் தீர்வு ஒன்றிலேயே அரசுக்கு நாட்டம் இருப்பதாகக் காட்டிக் கொள்கிறார். கடைசியாக வவுனியாவில் பேசுகையில் கூட, சமாதானம் பற்றியே பேசினார். தெரிவுக் குழு மூலம் இனப்பிரச்சினைக்குரிய தீர்வு கிடைக்கும் என்று "அனந்தார்"!

அரசாங்கத் தலைவர்களும், அதிகாரிகளும் இப்படி அளவுக்கு மீறிய நிலையில் குழம்பியுள்ளார்கள். சணம் பித்தம், சணம் வாதம் என்ற நிலையற்ற தன்மையுள்ளவர்களாகக் காணப்படுகிறார்கள்!

ஒரவருக்கு இந்த நிலைமை ஏற்படுவதற்கு அவரது மனம் தெளிவற்றதாக, படிமானமில்லாததாக இருப்பதே பிரதான காரணம். அது போலவே அரசுக்கும் இனப்பிரச்சினை விடயத்தில் தெளிவில்லை. அதனைத் தீர்த்து வைக்க வேண்டும் என்ற மனவிருப்பமும் இல்லை.

ஆகையால் தான் ஆளுக்கு ஆள் முரண்பாடாகவும், நேரத்துக்கு நேரம் மாற்றியும் ஒவ்வொன்றைக் கூறிவருகிறார்கள்.

சிங்கள அரசு எதுவாக இருந்தாலும், தமிழர்களின் போராட்ட வலுவைப் பலவீனப்படுத்தி, தமிழர்கள் விரும்பாத ஒரு தீர்வைத் திணிப்பதற்குச் சாதகமான காலம் வரும்வரை, இப்போதுள்ளதைப் போலவே குழப்பமடைந்து காணப்படும். தெளிவில்லாத தன்மையால் சணம் பித்தம், சணம் வாதக் குணம் கொள்ளும்.

இதயம் சுத்தமாக இல்லாததால் அதன் செயற்பாடுகள் இருள் மண்டியதாகவும் அரக்கத்தனம் மிகுந்ததாகவும் இருக்கும். அவற்றையே இப்போது கண்ணால் காண நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம். இதற்கு மாற்று வழி காண வேண்டியவர்கள் தமிழர்களே.

முன் வைத்த காலை பின் வைக்காமல், மிரட்டல்களுக்கு இடங்கொடுக்காமல், அழிவுகளால் மனஞ்சோராமல் உறுதியுடனும் விவேகத்துடனும் உழைக்க வேண்டும்.

# அரசுக்கு எதிராகச் செயற்படுவது மரணதண்டனைக்குரிய குற்றம்

## குற்றவியல் சட்டக்கோவை திருத்தப்படும்

கொழும்பு, ஜுன் 14

இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக செயற்படுவோர் மீது நடவடிக்கை எடுக்க குற்றவியல் நடைமுறை திருத்தச் சட்டமூலம் விரைவில் கொண்டுவரப்பட உள்ளது.

இந்த சட்டமூலத்தின்படி இலங்கைக் குடியரசுக்கு எதிராக யுத்தம் தொடுத்தல் அல்லது யுத்தம் தொடுக்க எத்தனித்தல் அல்லது அதற்கு உதவியாக இருத்தல் மரணதண்டனைக்குரிய ஒரு குற்றமாகக் கருதப்படும்.

விசாரணையில் அல்லது விளக்கத்தில் எந்தவொரு கட்டத்திலும் அவர்கள் பிணையில் விடுவிக்கப்பட மாட்டார்கள். ஒருவரைக் குற்றவாளியாகக் காண்பதற்கு பொய்ச்சாட்சி அளித்தல் அல்லது திரித்துக் கூறுதல் போன்றவற்றில் ஈடுபடுவோருக்கும் விசாரணையின் போது பிணை வழங்கப்படமாட்டாது.

இந்த இரு சந்தர்ப்பங்களிலும் மேல் நீதிமன்ற நீதிபதி ஒருவரினால் மாத்திரமே பிணை வழங்கப்படலாம். சட்டமா அதிபரின் அனுமதியைப் பெற வேண்டிய தேவையும் இனி இருக்க மாட்டாது என்று அறிவிக்கப்பட்டது. [த]

## "சார்க்" நாடுகளின் சபாநாயகர்கள் மாநாடு

கொழும்பு, ஜுன் 14

"சார்க்" நாடுகளின் சபாநாயகர்கள் மாநாடு எதிர்வரும் 15 ஆம், 16 ஆம் திகதிகளில் நாடாளுமன்றத்தில் நடைபெறும். [த]

## ஏழு மாதங்களின் பின்னர் சாந்தனின் சடலம் தகனம்

சென்னை, ஜுன் 14

கடந்த நவம்பர் மாதம் 14ஆம் திகதி முதல் தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்த சாந்தனின் சடலம் சுமார் ஏழு மாதங்களின் பின் கடந்த வாரம் பொலீஸாரால் தகனம் செய்யப்பட்டது.

வைத்தியசாலை குளிரூட்டி சாதனங்களுக்கு பாதிப்பு ஏற்படும் என டாக்டர்கள் தெரிவித்ததையடுத்தே சடலம் தகனம் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக திருச்சியில் வைத்து சாந்தனைக் கைது செய்ய முயற்சி எடுக்கப்பட்ட சமயம் அவர் சயனைட் அருந்தி தற்கொலை செய்து கொண்டார் என்று அப்போது அறிவிக்கப்பட்டது தெரிந்ததே. (உ-3)

## 785ஆம் இலக்க மினிபஸ் சேவை

யாழ்ப்பாணம், ஜுன் 14

785 ஆம் இலக்க மினிபஸ் சேவை மீண்டும் ஆரம்பமாகி உள்ளது.

மூளாயில்இருந்து புறப்படும் இந்த மினிபஸ் மாவடி, வட்டுக்கோட்டை, செட்டியார் மடம், துணைவி, சங்கரத்தை ஊடாக யாழ்ப்பாணத்தை வந்தடைகிறது.

இதே பஸ் யாழ்ப்பாணத்தில் இருந்து பிற்பகல் 2 மணிக்கு புறப்பட்டு அதே வழியாக மூளாயைச் சென்றடைகிறது. [ஒ]

## விடுதலைப் புலிகள் மீதான தடை:

# முக்கிய சட்ட நடைமுறை பின்பற்றப்படவில்லை!

சென்னை, ஜுன் 14

விடுதலைப் புலிகள் மீதான தடை தொடர்பாக முக்கியமான சட்ட நடைமுறை ஒன்று கடைப்பிடிக்கப்படவில்லை என்று சட்ட வல்லுனர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம் 1967இன் கீழேயே விடுதலைப் புலிகள் தடை செய்யப்பட்டதாக மத்திய அமைச்சர் எஸ். பி. சவான் அறிவித்திருந்தார்.

ஆனால் இவ்வாறு ஒரு அமைப்பை தடை செய்யும் அறிவிப்பு வெளியான ஒரு மாதத்துக்குள் அவ்வாறு அந்த அமைப்பை தடை செய்ய போதிய காரணங்கள் உண்டா என்று தீர்மானிக்க மேல்நீதிமன்ற நீதிபதி ஒருவரைக் கொண்ட தனிநபர் நடுவர் மன்றம் [One Man Tribunal] ஒன்றை மத்திய அரசு நியமிக்க வேண்டும் என்று மேற்படி சட்டம் கூறுகிறது.

அத்துடன் தனிநபர் நடுவர் மன்றம் தடை செய்யப்பட்ட அமைப்பை மன்றுக்கு அழைத்து அந்த அமைப்பை சட்ட விரோதமானது என ஏன் அறிவிக்கக்கூடாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு கேட்டுக் கொள்ளலாம்.

அவர்கள் அளிக்கும் விளக்கத்தைப் பரிசீலனை செய்த பின்னர், அமைப்பு சட்டவிரோதமானது என்பதை தீர்மானிக்கப் போதிய காரணங்கள் உண்டா இல்லையா என்பதை விசாரிக்க நடுவர் மன்றம் விசாரணை ஒன்றை நடத்தும்.

நடுவர் மன்றம் தடையை உறுதி செய்தால் அது 2 வருடங்களுக்கு அமுலில் இருக்கும் 2 வருட முடிவில் புதிய அறிவித்தல் மூலம் அது நீடிக்கப்படலாம்.

ஆனால் இவ்வாறான நடுவர் மன்றம் ஒன்று இதுவரை அமைக்கப்படவில்லை என்பதுடன் — இன்று 14 ஆம் திகதியுடன் புலிகளைத் தடை செய்து ஒரு மாதம் முடிவடைகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது. [த]

## சுற்றி வளைப்பு

மட்டக்களப்பு, ஜுன் 14

மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலையின் ஆண் ஆசிரியர்கள் விடுதி கடந்த வாரம் நள்ளிரவில் பொலீஸாரால் திடீரென சுற்றி வளைக்கப்பட்டது.

நித்திரையில் இருந்த ஆசிரியர்களை பொலீஸார் எழுப்பி விசாரணை செய்தனர்.

பின்னர் நான்கு ஆசிரியர்களையும் இரண்டு காவலாளிகளையும் பொலீஸார் கைது செய்து கொண்டு சென்றனர். எனினும் அவர்கள் விடுவிக்கப்பட்டனர். [உ-3]

# தெரிவுக் குழுவில் தான் பங்கேற்பது தொடர்பாக சு. கட்சி அறிக்கை

கொழும்பு, ஜுன் 14

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் அமர்வுகளில் மீண்டும் கலந்து கொள்வது என்று சுதந்திரக் கட்சி தீர்மானித்துள்ளது தெரிந்ததே.

அது தொடர்பாக, கட்சியின் மத்திய குழுவின் முடிவுக்கு இணங்க, கட்சியின் செயலாளர் தர்மசிறி சேனநாயக்கா விடுத்த அறிக்கை வருமாறு;

திருமதி சிறிமா பண்டாரநாயக்கா தலைமையில் கூடிய மத்திய கமிட்டி, தெரிவுக் குழுவில் பங்குபற்றுவது என்று தீர்மானித்தது.

நாடாளுமன்றத்தில் உள்ள எதிர்க்கட்சியினர் அரசாங்கத்துடனான பிரச்சினைகளை தீர்க்கும் வரை தெரிவுக்குழுவின் கூட்டங்களில் தற்காலிகமாகப் பங்குபற்றுவதில்லை என்று கட்சி தீர்மானித்து இருந்தது.

மீண்டும் தெரிவுக்குழுவில் பங்குபற்றுவது என்ற முடிவை எடுக்கும் போது, பின்வரும் விஷயங்களை கட்சி கருத்திற்கு எடுத்து கொண்டது;

★ நாடாளுமன்றத்தில் விவாதங்களை நடத்தும் போது நாடாளுமன்ற நடைமுறைகள் மற்றும் ஒழுங்கு விதிகளை பின்பற்ற வேண்டும் என்ற எதிர்க்கட்சியின் கோரிக்கையை அரசாங்கம் பிந்தியாவது ஏற்றுக்கொண்டுள்ளது. பிரச்சினைக்குரிய பல விஷயங்களையும் அரசு ஏற்றுக்கொண்டுள்ளது.

★ தெரிவுக்குழுப் பகிஷ்கரிப்பைக் கைவிடும்படி, சுதந்திரக் கட்சிக்குள் உள்ள தமிழர் மற்றும் முஸ்லிம் பிரிவுகள் கோரிவந்தன.

★ தமிழர் மற்றும் முஸ்லிம்களின் ஏனைய கட்சிகளும் இது தொடர்பாக விடுத்த வேண்டுகோள்களும் கருத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு வந்தன.

இனப் பிரச்சினை நாட்டின் பிரதான பிரச்சினைகளில் ஒன்று என ஏனைய கட்சிகளும் அரசாங்கமும் எண்ணுவதுடன்—

நாட்டின் நலன் கருதி அது குறித்து தீர்வு ஒன்றுக்கு வர உதவக்கூடியதாக உடனடிக் கவனம் செலுத்த வேண்டும் என்றும் சுதந்திரக் கட்சி அழைப்பு விடுக்கிறது.

— இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [த-எ]

## சந்தை விலைகள் (12—06—92 ஆம் திகதியன்று)

| பொருள்கள் [கி. கிராம்] | திருநெல்வேலி | யாழ். பெரிய கடை | சுன்னாகம் | பண்டத்தரிப்பு | அச்சுவேலி | பருத்தித்துறை | கொடிகாமம் |
|---|---|---|---|---|---|---|---|
| குத்தரிசி | 23-00 | 26-00 | 27-00 | 23-00 | 22-00 | 23-50 | 23-00 |
| கோதுமை மா | 13-00 | 13-00 | 14-00 | 13-50 | 13-50 | 13-00 | 13-50 |
| சீனி | 32-00 | 31-00 | 32-00 | 32-00 | 34-00 | 31-00 | 33-00 |
| உழுந்து | 40-00 | 42-00 | 45-00 | 48-00 | 30-00 | 45-00 | 45-00 |
| பயறு | 25-00 | 25-00 | 26-00 | 25-00 | 30-00 | 28-00 | 32-00 |
| கௌபீ | 20-00 | 24-00 | 25-00 | 25-00 | 25-00 | 25-00 | 22-00 |
| செ. மிளகாய் | 78-00 | 85-00 | 80-00 | 75-00 | 80-00 | 75-00 | 85-00 |
| தக்காளி | — | 60-00 | — | — | — | — | — |
| கத்தரி | 32-00 | 40-00 | 34-00 | 25-00 | 26-00 | 35-00 | 40-00 |
| வெண்டி | 32-00 | 24-00 | 16-00 | 18-00 | 40-00 | 35-00 | 44-00 |
| பாகல் | 32-00 | 40-00 | 35-00 | 30-00 | 40-00 | 31-00 | 40-00 |
| புடோல் | 20-00 | 20-00 | 18-00 | 10-00 | 25-00 | — | — |
| பயிற்றங்காய் | 30-00 | 40-00 | 35-00 | 27-50 | 40-00 | 25-00 | 30-00 |
| கோவா | — | — | — | 15-00 | — | 26-00 | — |
| கரட் | 28-00 | 50-00 | 40-00 | — | 40-00 | 22-00 | — |
| பீற்றூட் | 16-00 | 18-00 | 20-00 | 12-00 | 10-00 | — | 16-00 |
| வாழைக்காய் | 22-00 | 20-00 | 30-00 | 35-00 | 25-00 | 22-00 | 23-00 |
| ப. மிளகாய் | 22-00 | 25-00 | 30-00 | 20-00 | 25-00 | 45-00 | 40-00 |
| வெங்காயம் | 24-00 | 20-00 | 30-00 | 25-00 | 20-00 | 24-00 | 28-00 |
| தேங்காய் | 12-00 | 12-00 | 15-00 | 16-00 | — | 13-00 | 11-00 |
| வாழைப்பழம் (கதலி) | 14-00 | 15-00 | 10-00 | 15-00 | 12-00 | 10-00 | 18-00 |
| பெரிய மீன் | — | — | — | 200-00 | — | 45-00 | — |
| சிறிய மீன் | — | — | — | 150-00 | — | 11-00 | 30-00 |
| முட்டை | — | 8-00 | 8-00 | 7-00 | 8-00 | 8-00 | 6-50 |
| மண்ணெண்ணெய் [லீற்றர்] | 24-00 | 24-00 | 24-00 | 26-00 | 25-00 | 25-00 | 25-00 |

தகவல்: தமிழீழ ஆய்வு நிறுவனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயிலுநர் ஆசிரிய அலவன்ஸ்: திறைசேரி நிராகரித்தது

கொழும்பு, ஜூன் 14
வரவு செலவுத் திட்ட யோசனையில் அறிவிக்கப்பட்டிருந்த நூறு ரூபா மாதாந்த அலவன்ஸை 35 ஆயிரம் பயிலுனர் ஆசிரியர்களுக்கு வழங்க வேண்டும் என்று ஆங்கில ஆசிரியர் சங்கம் நிதி அமைச்சருக்கு விடுத்த கோரிக்கையை திறைசேரி நிராகரித்து விட்டது.

ஆங்கில ஆசிரியர் சங்கம் விடுத்த பத்திரிகை அறிக்கையில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

09-01-1992 திகதியிடப்பட்டு வெளியிடப்பட்ட இல, 1/92 பொது நிர்வாக அமைச்சு சுற்று நிருபத்தின் படி, அனைத்து சமயாசமய, நாளாந்த மற்றும் தற்காலிக ஊழியர்களுக்கு மாதாந்தம் மேலதிகமாக 100 ரூபா அலவன்ஸ் வழங்கப்படவேண்டும் என்றும் இக் கொடுப்பனவு 01-01-92 முதல் கொடுக்கப்படவேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த அலவன்ஸுக்கு நாளாந்த சம்பளம் பெறுபவர்களே தகுதியுடையவர்களாக இருக்கும் போது பயிலுநர் ஆசிரியர்களுக்கு இந்த அலவன்ஸ் வழங்கப்படக் கூடாது என்பதற்கு என்ன காரணம் என்பது தெரியவில்லை.

எனவே ஜனாதிபதி இது விஷயத்தில் தலையிட்டு பயிலுநர் ஆசிரியர்கள் இந்த மேலதிக அலவன்ஸைப் பெற நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று ஆங்கில ஆசிரியர் சங்கம் கோரியுள்ளது. (த-எ)

## வினாத்தாள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
தமக்கு என ஒதுக்கப்பட்ட 21 பரீட்சை நிலையங்களில் காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை காத்திருந்துவிட்டு ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர்.

எனினும் கிளிநொச்சி கல்வி மாவட்டத்துக்கு உட்பட்ட பகுதிகளில் இப்பரீட்சை திட்டமிட்டபடி நேற்று நடைபெற்றது.

கிளிநொச்சி கல்வி மாவட்டத்துக்குட்பட்ட — பளைப் பகுதிக்குரிய — பரீட்சார்த்திகளுக்கான பரீட்சைகளும் கொடிகாமப் பகுதியில் நடைபெற்றதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

கிளிநொச்சி கல்வி மாவட்டத்துக்குரிய வினாத்தாள்கள் வவுனியா மூலம் — தரை மார்க்கமாக — ஏற்கனவே எடுத்து வரப்பட்டன என்றும் —

பளைப்பகுதிக்குரிய வினாத்தாள்கள் அங்கிருந்து யாழ். கல்வி அலுவலகத்துக்கு அனுப்பப்பட்டு, யாழ். கல்வி அலுவலகத்தின் மேற்பார்வையில் பரீட்சை மண்டபங்களுக்கு கொண்டு செல்லப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. [உ-5-162]

## ஆலயங்கள்...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)
என்றும் அவர் கூறினார்.

கடந்த இராணுவ நடவடிக்கையின் போது ஆலயங்கள் தாக்கப்பட்டனவா? என்ற கேள்விக்கு அவர் பதில் அளிக்கையில் ஆலயங்கள் தாக்கப்பட்டதாக தமக்கு முறைப்பாடுகள் கிடைக்கவில்லை என்றும், செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவும் இதுபற்றி முறையிடவில்லை என்றும் கூறினார். [இ-3]

## மாதகல் அந்தோனியார் உற்சவம்

யாழ்ப்பாணம், ஜூன் 14
கடந்த வெள்ளி, சனிக்கிழமைகளில் நடைபெறவேண்டிய மாதகல் புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. நற்கருணை ஆராதனை நாளை திங்கட்கிழமையும், செவ்வாய்க்கிழமை காலை திருப்பலியும், திருச்சுருப, ஆசீர்வாதமும் இடம்பெறும் என புனித அந்தோனியார் ஆலய பங்குச்சபை அறிவித்துள்ளது. [உ]

## தெரிவு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
குழுவில் ஸ்ரீ. ல. சு. கட்சி மீண்டும் பங்குபற்ற முடிவு செய்திருப்பதைத் தொடர்ந்து, எதிர்வரும் 20 ஆம் திகதி தெரிவுக்குழு கூட இருக்கிறது. [அ-த-5]

## நாளை

யாழ்ப்பாணம், ஜூன் 14
மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலய இல்ல விளையாட்டுப் போட்டி நாளை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும். [உ-170]

★ ★ ★

தமிழறிஞர் கந்தமுருகேசனார் நினைவு நாள் பேருரை நாளை காலை 9 மணிக்கு புத்தளை மகாவித்தியாலயத்தில் நடைபெறும். மகாவித்தியாலய பழைய மாணவர் மன்றம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

வடமராட்சி கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். ஏகாம்பரநாதன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்ச்சியில் கரவைக்கிழார் நினைவுப் பேருரை நிகழ்த்துவார்.

## புலிகளை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
களைத் தீவிரப்படுத்தியது—

இராணுவத்தினர் கடற்படை, விமானப் படை ஆகியவற்றின் உதவியோடு தமது முழுப்பலத்தையும் பயன்படுத்தி குடாநாட்டில் தாக்குதல்களை நடத்தி வருவதாக இராணுவ அதிகாரிகள் பகிரங்கமாகக் கூறி வருகிறார்கள்—

இத்தகைய சூழ்நிலையில் பி. பி. ஸியின் கொழும்புச் செய்தியாளர் தாம் அரசாங்க அதிகாரியிடம் யாழ்ப்பாணத்தைப் பிடிப்பீர்களா? புலிகளின் பலத்தைக் குறைத்து விடுவீர்களா? என்று கேட்டபோது அவர் பின்வருமாறு தெரிவித்ததாகக் கூறினார்.

உலகில் மிகவும் சிறந்த காந்தடிப் படையினர் எனக் கணிக்கக்கூடிய விடுதலைப் புலிகளை முழுமையாக வெற்றி கொள்வது என்பது இயலாத காரியம்.

இராணுவ மேலதிகாரிகள் யாழ்ப்பாணத்தை முழுமையாகக் கைப்பற்றுவது இயலாத காரியம் அல்ல என்று கூறினாலும்.

அதனைத் தொடர்ந்து கட்டுப்பாட்டில் வைத்திருப்பது கடினமானது என்பதே உண்மை— என்றார்.

இதேவேளை கடந்த மூன்று வாரங்களுக்கு முன் இராணுவத்தினர் புதிய தாக்குதல்களை ஆரம்பித்ததில் இருந்து மூன்று இராணுவ உயர்நிலை அதிகாரிகள் கொலையுண்டதாகவும் பி. பி. ஸி. தெரிவித்தது. (அ-10)

## தொண்டர் ஆசிரியர் நிரந்தர நியமனம்:

# நேர்முகப் பரீட்சை வவுனியாவில் நடைபெறும்?

கொழும்பு. ஜூன் 14
யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் பணியாற்றும் தொண்டர் ஆசிரியர்களை நிரந்தரமாக்குவதற்கான நேர்முகப் பரீட்சையை வவுனியாவில் நடத்துமாறு கல்வி ராஜாங்க அமைச்சர் திருமதி ராஜமனோகரி புலேந்திரன் உத்தர விட்டுள்ளார்.

ஏனைய மாவட்டங்களில் கடமையாற்றிய தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனங்கள் சமீபகாலமாக வழங்கப்படுகின்ற போதிலும், மேற்குறிப்பிட்ட மாவட்டங்களில் இராணுவ நடவடிக்கைகள் இடம் பெறுவதால் நியமனங்கள் மேற்கொள்ளப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

ஆயினும் கடந்த வாரம் இம் மாவட்டங்களைச் சேர்ந்த தொண்டர் ஆசிரியர்கள் அமைச்சரைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியதை அடுத்தே கல்விச் சேவைகள் குழுவிடம் அமைச்சர் இப்பணிப்புரையை விடுத்தார். [த]

# கிழக்கிலும் வவுனியாவிலும் 8 பிரதேச செயலகங்கள்

கொழும்பு, ஜூன் 14
மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மற்றும் வவுனியா மாவட்டங்களில் எட்டு பிரதேச செயலகங்கள் இம்மாதம் திறந்து வைக்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

திருகோணமலை மாவட்டத்தில் — திருமலை நகரம், கந்தளாய் ஆகிய இடங்களிலும் —

மட்டக்களப்பு மாவட்டத்தில் — மண்முனை மற்றும் காத்தான்குடியிலும் —

அம்பாறை மாவட்டத்தில் உகணை மற்றும் சம்மாந்துறையிலும் —

வவுனியா மாவட்டத்தில் — வவுனியா தெற்கு (தமிழ்ப் பிரிவு) மற்றும் வவுனியா சிங்களப் பிரிவிலும் இப்பிரதேசச் செயலகங்கள் திறக்கப்படும் என்று வடக்கு-கிழக்கு மாகாண உள்துறை அமைச்சின் பிரதிச் செயலாளர் திரு. எஸ். சடாட்சர சண்முகதாஸ் தெரிவித்துள்ளார்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள எட்டு மாவட்டங்களில் 70 பிரதேசச் செயலகங்கள் அமைக்கப்படவுள்ளன. (இ-எ)

## பீரங்கிப்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
யினர் தொடர்ச்சியான துப்பாக்கிப் பிரயோகத்தில் ஈடுபட்டிருந்தனர்.

சுமார் 15 நிமிடங்கள் வரை துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டது.

யாழ். கோட்டை, பண்ணை, கொட்டடி தொலைத்தொடர்பு நிலையப் பகுதிகளை நோக்கியே வேட்டுகள் தீர்க்கப்பட்டன. [ஓ-5-51-15]

## பொருள் விநியோகம்

யாழ்ப்பாணம், ஜூன் 14
பாடசாலை மாணவர்களின் நவம்பர், மார்ச் மாத மதிய உணவு முத்திரைகளுக்கான பொருள்கள் யாழ். ப. நோ. கூ. சங்கக் கிளைகளில் நாளை திங்கள் முதல் விநியோகிக்கப்படும் என யாழ். ப. நோ. கூ. சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. [உ-5]

## உற்சவம்

யாழ்ப்பாணம், ஜூன் 14
யாழ். நீராவியடி ஜெயவீரகத்தி விநாயகர் ஆலய அலங்கார உற்சவம் இன்றாகும். அதனை ஒட்டி இன்று பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. மேளக்கச்சேரிகள், வில்லிசை மற்றும் சாந்தன் குழுவினரின் இன்னிசை ஆகியவை இடம்பெறும்.

''பட்டினத்தார்'' என்னும் பொருளில் சின்னமணி கணபதிப்பிள்ளை குழுவினர் வில்லிசை நிகழ்த்துவர். (உ)


# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் ;
05-01-1953



விண்ணில் :
14-06-1990

## அமரர் புஷ்பரஞ்சினி பொன்னுத்துரை

இனிய உன் சிரிப்பினால் — எம்
இதயம் நிறைந்து சிரித்ததே ரஞ்சி மாமி — நீங்கள்
இறைவனடி சேர்ந்து எங்கள்
இதயத்தில் புகுந்து விட்டீர்களா ரஞ்சி மாமி
இரண்டாண்டுகள் சென்றுவிட்டதம்மா — உன்
இனிய குரல் கேட்டு நாமும் ரஞ்சி மாமி — இன்று
நான் பிறந்த நாளினிலே — உனை
நினைக்க வேண்டுமென்று மறைந்தாயோ ரஞ்சி மாமி
அப்பப்பா அப்பாச்சியுடன் உன் அன்புச் சகோதரங்கள்
உன் நினைவால் அழுகின்றார் ரஞ்சி மாமி
ஆசையோடு நீவளர்த்த பெறாமக்களும் மருமக்களும் — உன்
ஆசி வேண்டி நிற்கின்றோம் ரஞ்சி மாமி

உன் அன்புக் குடும்பத்தினர்.

மகளிர் கல்லூரி வீதி, சாவகச்சேரி. [2139..]



## Exhibition - Cake and Sugar Craft

மேற்படி கேக் கண்காட்சி 18 - 06 - 92 முதல் 22 - 06 - 92 வரை காலை 9.00 மணி முதல் மாலை 6.00 மணிவரை தினமும் நடைபெறும்.

நடைபெறும் இடம்:- Yogi Home Science Accadamey, 71, Nayanmar Veethy, Kachcheri—Nallur Road, Nallur, Jaffna.

[C/2114]



இணுவில் கந்தசுவாமி கோவில் இளந்தொண்டர் சபை

## அறிவித்தல்

மேற்படி ஆலய மகோற்சவத்தை முன்னிட்டு சபையினரால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த ''இறைகான இசைநிகழ்ச்சி'' கால சூழ்நிலையைக் கருத்திற் கொண்டு தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றோம்.

[21393] —தலைவர்.


மரண அறிவித்தல்கள் 2 ஆம் பக்கத்தில்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 14 - 06 - 1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org